[illegible]ளிபுரிவோருக்கு முத்திரை வேண்டாம்?

விலை அரை அணா 4 பக்கம் Regd. No. M. 545
Phone No. 4502

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிட தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—9—49) வெளியீடு (8—9—49) [இதழ் 29

கனி தேடும் கருத்தோடு காய்கவரும் முயற்சி

தொடையைக் கிள்ளுவது ஏன்? தொட்டிலையும் ஆட்டுவது ஏன்?

ஸ்தலஸ்தாபன மந்திரியின் மகிழ்ச்சியும்—மருட்சியும்!

"நகரசபை அங்கத்தினர்கள் கட்சிப் பிரதிநிதிகளாயில்லாமல் மக்களின்முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும்" (சிவகாசி நகரசபை உபசாரப் பத்திரம் அளித்தபோது ஸ்தலஸ்தாபன அமைச்சர் கனம் சந்திரமௌலி பேசியது)

"பெரும்பாலான ஜில்லாபோர்டுகளில காங்கிரஸ்வெற்றி பெற்றுள்ளதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு ஜில்லாக்களில்மட்டும் காங்கிரசுக்குத் தேவையான பலம கிடைக்காமல்போனது வருந்தக்கூடிய விஷயம்"

"ஆந்திரநாட்டில வாக்காளர்கள், காங்கிரஸ் அபேட்சகர்களையே ஆதரிப்பார்கள் என்பதில், எனக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது."

"அந்தந்த வட்டாரங்களில் உள்ள வாக்காளர்கள், காங்கிரஸ் அபேட்சகர்களையே ஆதரிப்பதுஎன்ற முடிவிற்குவந்து, காங்கிரசுக்குச் சாதகமாகத் தெளிவான தீர்ப்பளிக்குமாறு, வாக்காளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"சில சுயநலமிகள், தங்களுக்குச் சாதகமாக, மந்திரிகளின் பெயர்களைப் பொய்யாக உபயோகப்படுத்திவருவதாகக் கேள்விப்படுகிறேன். அத்தகையபித்தலாட்டப் பிரசாரத்தை, வாக்காளர்கள் பொருட்படுத்தாமல், காங்கிரஸ் எதிரிகளுக்குச் சரியான பதில் அளிக்குமாறு வேண்டிக்கொள்ளுகிறேன."

(கனம் அமைச்சர் சந்திர மௌலி, ஆந்திர நாட்டு வாக்காளர்களுக்கு 5-9-49-ல் வெளியிட்ட வேண்டுகோள்.)

அறிவுரை—அபத்த உரை! தெளிவு—குழப்பம்! அறிவின் துணை தேடுவது—ஆசைககு அடிமையாவது! விவேகச்சிந்து பாடுவது-வீராவேசம் கொள்வது! மகிழ்ச்சி பெறுவது—மறுகணம் மருட்சி அடைவது!

ஜில்லா போர்டு தேர்தல்கள், தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் முடிந்துவிட்டது. இரண்டு ஜில்லாக்களைத் தவிர்த்து மற்ற ஜில்லாக்களில் காங்கிரஸ் கட்சிக்கு பெருவாரியான வெற்றி கிடைத்து விட்டது. இந்த வெற்றி எப்படிக் கிடைத்தது, இதனால் காங்கிரஸ் கட்சிக்கு விளையப் போகும் பலா பலன் என்ன, காங்கிரசுக்கு வாக்களித்தவர் எண்ணிக்கை என்ன, எதிர்த்து நின்றவர்களுக்கு வாக்களித்தவர்களின் தொகை என்ன, எந்தெந்த முறைகளைக் கையாண்டு காங்கிரஸ் இந்த வெற்றியைப் பெற்றிருக்கிறது; ஆளவந்தார்களின் போக்கை வாக்காளர்கள் ஆதரிக்கிறார்கள் என்பதற்கு இந்தவெற்றியைஒரு அளவு கோலாகக் கொள்ள முடியுமா, மக்களாட்சி முறைக்கும் இந்த வெற்றிக்கும் உள்ள சம்பந்தா சம்பந்த மென்ன, என்பது போன்ற ஆராய்ச்சியைப் பிறிதோர் சமயம் பார்த்துக் கொள்வோம். அவைகள் எல்லாவற்றைக்காட்டிலும், நாம்கவனிக்கவேண்டிய, முக்கியமான வேறு ஒரு விஷயம் இருக்கிறது. அதாவது, ஜில்லாபோர்டு போன்ற ஸ்தல ஸ்தாபனங்களில், அரசியல் கட்சிகள் பெயர்கூறி தேர்தலுக்கு நிற்பது நேர்மையானதுதானா என்று ஆராய்ந்துபார்க்க [illegible] கட்டியமற்றும் [illegible]

வனங்கள் அல்ல, ஸ்தல ஸ்தாபனங்கள், நல்ல பாதைவேண்டாமென்று, எவ்வளவு பிற்போக்கான கட்சியாக இருந்தாலும், கூறத்துணிவுகொள்ளாது. தொடக்கப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கு நிதி வசதி இருக்குமானால், வேண்டாமென்று மறுக்க எந்தக் கட்சியும் முன்வராது. கட்சி என்ன, அரிச்சுவடி அறியாத அங்கத்தினர்கூட, கல்வி வளர்ச்சியைத் தடுக்கவேண்டுமென்று தலையாட்டமாட்டார். தொத்து நோய்கண்ட கிராமத்திற்கு, நோய் தடுக்கும் முறைகளை மேற்கொள்ளக்கூடாது என்று, தொழுநோய்கொண்ட உறுப்பினர்களாக இருந்தாலும், தடுத்து நிறுத்தமாட்டார்கள். எனவே அரசியல்கட்சிகள் அங்குப்போய் சாதிக்கவேண்டியகாரியம்ஒன்றுமில்லை. அரசியல் கட்சிப் பெயர் கூறி தேர்தலுக்குப் போட்டி இட வேண்டிய தேவையும் இல்லை.

அரசியல் கட்சியின் பெயரால் அணிவகுத்து, ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் போட்டி இடுவதால், தேர்தல்காலத்திலே ஏற்படுகிற மனமாச்சரியம், தேர்தல் முடிந்த உடனே குறைந்துவிடாமல், விரிவான அளவில், அடிதடி ஏற்படுகின்ற நிலையில், பயங்கர உருவாகிவிடுகிறது. இதற்குச் சரியான எடுத்துக்காட்டு, தென்னாற்காடு ஜில்லாபோர்டு தேர்தல் ஒன்றே போதுமானதாகும். ஜில்லாவில்உள்ளமக்கள்தொகையில நூற்றுக்கு [illegible] திற்குமேல், வன்னிய சமூக மக்களாகும். ஜாதிஉணர்ச்சி வளரு [illegible]

பேசிவருவதை பலரும் அறிவர். அந்தப் பேச்சின்சமரசத்தத்துவம் நாட்டில் நிலைபெற வேண்டுமென்ற நல்ல நோக்கம் காங்கிரஸ் கட்சிக்கு இருந்திருக்குமானால், இந்தத் தேர்தலில் எப்படி நடந்துகொண்டிருக்கவேண்டும காங்கிரஸ் கட்சி? காங்கிரஸ் கட்சிக்கு ஆள் தேடுவதற்கு, அந்தப் பெரும் சமுகத்தில பிளவுபடுத்தும் பெரும்பணியில ஈடுபடுவது நல்லதா, அல்லது அந்தந்த வட்டார மக்கள், தங்கள் நம்பிக்கையைப் பெற்றுள்ள எவராவது ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடுவது நல்லதா என்று, தேர்தலில் போட்டி இடுவதற்கு முன்னால, காங்கிரஸ் கட்சி தீர யோசித்து இருக்கவேண்டாமா? காங்கிரஸ் கட்சி தேர்தலில் போட்டியிடாமல் இருந்திருந்தால், அந்த ஜில்லாவிலுள்ள சகல வகுப்பிலுமுள்ள முக்கியஸ்தர்கள் ஒன்றுகூடி, மனங்கலந்து பேசி, தேர்தலினால் ஏற்படும் பகை உணர்ச்சிக்குச் சிறிதும் இடமில்லாமல், எந்த ஒரு சமுகமும் தமக்குரிய பங்கை இழந்துவிடாமல், சமுக எண்ணிக்கைக்கேற்ப ஜில்லாபோர்டில் இடம் பெறவும், நேர்மையான முறையில் தேர்தல் நடக்கவுமான நிலை ஏற்பட்டிருக்குமன்றோ?

இந்த நல்ல முறையினாலும், தனிநபர்கள்சிலரிடைப் பகைமை ஏற்பட்டாலும், அப்படி ஏற்படும் விரோதம் அந்தச் சிலருடனே நின்றுவிடுமேயன்றி, அவர்கள் ஒவ்வொருவரும் பிறந்த சமுகத்தைச் சேர்ந்தவர்கள், சமுகம் சமுகமாகப்பிரிந்து, வல்லடி வழக்குப் பேசும் கெடு நிலை ஏற்படாதன்றோ?

இந்த தீயான முறையைக் கையாளுவதை விட்டு விட்டு, ஆளவந்தார்களின் கட்சிக்குத்தான் நாட்டு மக்களின் ஆதரவு இருக்கிறது என்றும் ஒரே, போராசையை மனத்தில் கொண்டு, காங்கிரஸ்கட்சி நாட்டு மக்களிடைப் பகைமையை மூட்டிவிட்டது, மனிதப் பண்புபடைத்தவர்களால், மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும்.

காங்கிரசின் தவறான நடத்தையினால், ஆளவந்தார்களின் ஆதிக்க ஆசையினால், தேர்தல் பெயர் கூறி, மக்களிடை மூட்டிவிடப்பட்ட விரோத மனோபாவம், வெற்றி தோல்வி கண்டு விட்டதோடு நின்று விடப் போவதில்லை. ஜில்லா போர்டுகளில், மக்களுக்கு நலம் செய்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

கலையுள்ளம் பெருத[illegible] அமைச்சர்

ஆஜாத் அறிந்த கலைமை[illegible] அமிர்தகௌரி அறியவில்லை

மத்திய அரசாங்க சுகாதார அமைச்சர் திருமதி ராஜகுமாரி அமிர்தகௌரி என்பார், கல்கத்தா வைத்திய ஆராய்ச்சிக் கழக விருந்தில் பேசியபோது,

"மக்களுக்குப் போதிய உணவும் குடி இருக்க வீடும் அளிக்காவிடின், அபிவிருத்தித் திட்டமொன்றும் வெற்றிகரமாக நிறைவேற முடியாது.

"வாழ்க்கையில்ஒவ்வொருதுறையிலும் அபிவிருத்தித் திட்டங்கள் கொண்டுவருவது பற்றிப் பேசலாம். ஆனால் பசியால் துடிக்கும் குழந்தைகளுக்கு நாம் நிச்சயமாகக் கல்வி போதிக்க முடியாது. அதே போல வியாதியால் அல்லலுறும் மக்களை வேலை செய்யுமாறு கேட்கவும் முடியாது. ஆகவே, போதிய உணவும் குடியிருக்கத்தக்க வீடுகளுமே நமது பிரதான தேவைகளாகும்." என்று கூறினார்.

ஆனால் அதே கல்கத்தாவில் பேசிய, மற்றொரு மத்திய அரசாங்க அமைச்சர் தோழர் ஆஜாத் மக்களுக்கு மற்றவைகளை விடக் கலைப்பயிற்சியே மிகவும் முக்கியமாகத் தேவை என்று வற்புறுத்தியதுடன், மக்களனைவரையும் கலாரசிகர்களாக்கும் வேலையில் உடனே ஈடுபட வேண்டுமென்றும் அதற்கான திருப்பணியில் கலைவாணர்கள் உடனே இறங்க வேண்டுமென்றும், கலையுள்ளத்தை வளர்க்கவென்று மத்தியக் கழகம் ஒன்றை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யப் போவதாகவும் அறிவித்தார்.

அவர் கூற்றைச் சிரமேற்றாங்கிய சென்னை மந்திரி ஒருவரும், ஒரு கல்லூரி ஆசிரியரும, மக்கள் பட்டினிகிடந்தாலும் பரவாயில்லை, கலாரசிகர்களாகித் தீரவேண்டுமென்னும் பிரசாரத்தில் உடனடியாக இறங்கி விட்டார்கள்.

மற்றொரு சென்னை மந்திரியோ மக்களனைவரும் வள்ளிக்கிழங்கையும் வாழைப்பழத்தையும் தின்றால் போதுமென்றும், சோற்றுக்கூச்சல் போட்டுக்கொண்டிருக்கக்கூடாதென்றும் கூறிவிட்டார்.

இவற்றையெல்லாம பத்திரிகைகள் மூலம் நன்கறிந்திருக்கும் திரு. அமிர்தகௌரி, தம் சகாக்களுள் ஒருவரான ஆஜாத்தின் ஆசை[illegible]

யைச் சற்றும் மதிக்காமல் அதற்கு நேர்விரோதமான கருத்தை முத[illegible]லில் வேண்டுவது உணவும் உறை[illegible]யுளுமே-என்று கூறியிருப்ப[illegible] திரு. அமிர்த கௌரி கலையுள்ள[illegible] பெருதவர் என்பதைஎடுத்துக்கா[illegible]டுகிறதா? அல்லது இந்த இரண்[illegible] மந்திரிகளுக்குமிடை ஏதாவது தகராறு இருந்து, அதன் பலனா[illegible] ஒருவர் கூறுவதை மற்றவர் எதி[illegible]த்துப் பேசுவது என்றநிலை ஏற்ப[illegible]டிருக்கிறது என்பதை எடுத்துக்[illegible]காட்டுகிறதா?

அல்லது இந்தமந்திரிகள் எவ[illegible]ருமே, பிறர் என்ன கூறுகிறார்க[illegible] என்பதைப் பற்றிச சற்றும் அக்கறை கொள்ளாமல், தாம் தாம் வகிக்கும் இலாக்காக்கள் பற்றி[illegible] சொற்கள் கிடைக்குமளவு [illegible] திடன் பேசிவிட்டுச செயல் முறை பற்றிக் கவலைப்படாமல் வீடுவந்து சேர்ந்துவிடும் கூட்டத்தினர் என்பதை எடுத்துக்காட்டுகிறதா! இவர்களுடைய உண்மை நிலை எது வென்பதைப் பொதுமக்களாகிய நீங்களே முடிவு கட்டுங்கள்.

—————

போட்டிருக்கும் வரிகள் போதா[illegible]

தோழர் நாச்சியப்பர் மந்திரிகள் மனத்தை மகிழவைக்கிறார்

திருச்சியில நடைபெற்ற கிராமப் பஞ்சாயத்துக்கள் மாநாட்டில திரு. கே. எ. நாச்சியப்பக் கவுண்டர் தலைமை வகித்துப் பேசுகையில் காங்கிரஸ் அரசாங்கம், மக்கள் குறை கூறக்கூடியவாறு நடந்து கொள்வதற்கு அதிகார வர்க்கம அரசாங்கத்துடன் ஒத்துழைக்காததே [illegible]மாகுமென்றும், நம் மாகாண [illegible] சாங்கம் போட்டிருக்கும் வரிகள் அனைத்தும் மிகவும நியாயமானவைகளே என்றும் அதிக்கிரி சுமத்தவில்லை யென்றும் கூறினார்.

வரிப்பளு தாங்க முடியவில்லை என்ற கூக்குரலை ஒரு செவியில் வாங்கி மற்றொரு செவியில் வெளி விடக் கூடிய நிலையில் உள்ள தோழர்களுக்கு வரிக்கஷ்டம் என்பது என்னவென்று தெரியப் போகிறது. உழைப்பறியாத உத்தமர்கள் உட்கார்ந்த விட[illegible] இருக்[illegible] கொண்டு எதையும் பேச[illegible] [illegible]

மாலை மணி

சென்னை 7—9—49 புதன்கிழமை

பழி வாங்கும் படலம்!

சாதியின் காரணமாகச் சகல வசதிகளையும் பெற்றுவாழ்ந்த இனம் ஒருபால்! சில வசதிகளைமட்டும் பெற்று வாழ்ந்த சிலசமூகங்கள் மற்ருேர் பால்! இன்றியமையாத வசதிகள் பல மறுக்கப்பட்டு, வீழ்ச்சியுற்றுக், குற்றேவல் தொழில்களை புரிந்து வந்த வகுப்புகள் வேருேர்பால்!

வசதிபெருத சமூகங்களுக்கு, கிடைக்காத வசதிகளை ...க்கவும், வீழ்ச்சியுற்ற சமூகங்களுக்கு உயர்வு தரவும், நீதிக்கட்சி ஆட்சி புரிந்த காலத்தில், சென்னைமாகாண அரசாங்கம், கவலை கொள்ள ஆரம்பித்தது. அதன் காரணமாக, வீழ்த்தப்பட்ட சமூகங்களைத் தனியே பிரித்தெடுத்து; அவைகளை,வாழ்க்கையில் பிற்...ல் இருந்துவரும் சமூகங்கள் என்ற கருத்துப்படும்படி, பிற்போக்கு வகுப்புகள் என்று பெயரிட்டுத், தேவையான சலுகைகளை அவைகளுக்கு வழங்க, நீதிக்கட்சி, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த அந்தக் காலங்களில், அதிக அக்கரைக் காட்டி வந்தது.

சென்னை மாகாணத்தில்மட்டும், அப்படிப் பிற்போக்கு வகுப்புகள் என்று, சேகரிக்கப்பட்ட பட்டியலில, ஏறத்தாழ நூற்றைம்பது வகுப்புகள சேர்க்கப்பட்டன. இலவசக் கல்விச் சலுகை, முழுச் சம்பளச் சலுகை, அரைச் சம்பள சலுகை, தொழிற் கல்லூரிகளில் இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும் சலுகை, உத்தியோகங்களில் சலுகை ஆகிய இவை, அவ்வகுப்புகளுக்குக் காட்டப்பட்டுவந்தன. அப்படிப் பல ஆண்டுகள் சலுகைகள் காட்டப்பட்டு வந்ததன் காரணமாக, வீழ்த்தப்பட்டுக்கிடந்த சமூகங்களிலே பிறந்த பலர், இன்று உயர்வாழ்வு வாழும் நிலைமை ஏற்பட்டது. சிலர்தான் அப்படி வந்திருக்கிருர்கள் — முன்னேற்ற சமூகத்தைக் காணும் போது பிறபோக்கு வகுப்புகளிலிருந்து உயர் நிலைக்கு வர வேண்டியவர்கள் ஏராளமாக இருக்கின்ருர்கள். இந்த முறையினுல் அச்சமூகங்களிடையே, ஒருவித விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை, யாரும் மறுக்க முடியாது.

வாழ்க்கை வசதிகள்கிடைக்கப்பெருமல், தத்தளித்துக் கொண்டிருந்த சமூகங்களிலே, ஒன்றுதான் **'வன்னியகுல க்ஷத்திரிய வகுப்பு'**. பிற்போக்கு வகுப்புகளின் பட்டியலில் தான், அந்த வகுப்பும் சேர்க்கப்பட்டிருந்தது-சலுகைகளும் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டு வந்தன.

'வன்னியகுல க்ஷத்திரிய வகுப்பினர்', தங்கள் பழங்கால வரலாற்றினைப் புரட்டிப்பார்த்து, அதன்படி, தாங்கள் அரச குலத்தினர் என்றும், படை மறவர்கள் என்றும், பெருமை கொள்கிருர்கள். அவர்கள் அப்படிப் பெருமை கொள்வதிலே தவறு ஒன்றுமில்லை. பெருமையின் மீது அவர்கள் கொண்டிருக்கும் ஆசை, அதனுல் ஏற்படும் திருப்தி, அப்படி இருக்கிறது என்று கூறி, விட்டுவிடலாம. அவர்கள், தங்களை அரச பரம்பரையினர் என்று அழைத்துக்கொண்டாலும், வாழ்க்கை நிலை, அவர்களில் பெரும்பாலோரைப் பிற்போக்கினா பட்டியலில் தான் கொண்டுவந்து சேர்த்தது. அவர்களும், தாங்கள் பிறபோக்கு வகுப்பினர் என்ற காரணங் காட்டித்தான், ஓரளவு சலுகையாவது பெற்று, கல்வி, அரசாங்க அலுவல்கள், போன்ற வாழ்க்கை வசதிகளைப் பெற முடிந்தது.

பிற்போக்குச் சமூகங்கள், உயர் வகுப்பினரைப்போல், சமசந்தர்ப்பங்களைப் பெறுகிற வரையில், இத்தகைய சலுகைகள் இருந்து தீரவேண்டும் என்ற எண்ணத்தின்மீது, நீதிக்கட்சியால் கடைப்பிடிக்கப்பட்ட முறை, காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகும்கூட, நடைமுறையில்கொணடுவரப் பட்டு வந்தது. இப்பொழுது, திடீரென்று பிற்போக்குவகுப்புகள் பட்டியலிலிருந்து, **'வன்னிய குல க்ஷத்திரிய வகுப்பை'** நீக்கிவிட்டது சென்னை அரசாங்கம்.

பிற்போக்கு வகுப்புகள் பட்டியலிலிருந்து வன்னியர் குலத்தை மட்டும் நீக்குவதற்குத் திடீர் நிலை ஏன் ஏற்பட்டது?எப்படி ஏற்பட்டது?காரணம் என்ன ? என்ன காரணம் ?

வன்னியர் குலம். பணக்காரர்களுடைய செல்வாக்குப் பெற்ற சமூகமாக அரசாங்கத்திற்குப்பட்டதாம்! ஆகவே அதனைப் பிற்போக்கினர் பட்டியலிலிருந்து நீக்கத திட்டமிட்டுவிட்டதாம்! இந்த அவசர எண்ணமும, தெளிவும், இத்துணைநாள் இல்லாமல் இப்பொழுது ஏற்படுவானேன்? அதில்தான் சூட்சமும் அடங்கியிருக்கிறது !

சூட்சமம் என்ன? **பழி வாங்கும் படலத்தின் ஆரம்பம்!**

அண்மையில் நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில், காங்கிரஸின் சார்பாக நிறுத்தப்பட்டப் பிரதிநிதிகள், அனைவரும் வன்னிய குலத்தினரால் முறியடிக்கப்பட்டு விட்டனர். அந்த இடங்களில், காங்கிரஸ் மூக்கறுபட்டு, ஓடி ஒளியும் நிலை ஏற்பட்டுவிட்டது! காங்கிரஸ், எங்கும் காணுத படு தோல்விகளை, வன்னியர் குலத்தினர் பெருவாரியாக உள்ள பகுதிகளில் கண்டுவிட்டது! காங்கிரஸ் அவமானம் அடையும் விதத்தில், வன்னிய குலத்தினர் பாடங் கற்பித்து விட்டனர், இந்தத் தேர்தலில்! அதுதான் காங்கிரஸ் ஆளவந்தார்களுக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது, என்ன செய்வார்கள், பாபம்! கொதித்தெழுந்தார்கள்! பிடி சாபம என்றனர்! இனிமேல் 'வன்னியர்களுக்குச்' சலுகை கிடையாது! என்றனர். அவ்வளவுதான்!

தனக்கு ஆதரவு தரவில்லை என்ற ஒரேகாரணத்துக்காகக், காங்கிரஸ் அரசாங்கம், வன்னியர் குலத்தினர் மீது சீறிப் பாய்கிறது! பழிவாங்கும் படலத்தைத் துவக்கியிருக்கிறது! ஆறப்பொறுத்துச் செய்திருந்தால் கூட, காங்கிரஸ் ஆட்சியினரின் சிறுமையை மககள் அறிந்து கொள்ளாமலிருக்க வழியேறபட்டிருககும். ஆத்திரம ஆளவந்தாரின் கண்ணை மறைககிறது. என் செய்வது! அதிகாரம அவர்கள் கையில் இருக்கிறது!

சமூக வேறுபாடுகள்-பிரித்துக் கணக்கிடும் முறை, ஒழிய வேண்டும் என்பதுதான நம் நோக்கம் என்ருலும, பலநூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இழைக்கப்பட்டு வந்த கேடுகளை, ஒழித்துச், சமத்துவத்தைக்காண வேண்டுமாயின, வீழ்ந்து பட்ட இனங்களுக்குச, சம சந்தர்ப்பங்களை அளிக்கத்தான் வேண்டும். அதனை மறந்து, ஆத்திரத்தை அடிப்படையாகக் கொணடு, பழி வாங்கும் படலததைத் துவககியிருப்பது, சிறுமையின் அறிகுறியே யல்லாமல், பெருமைக்குரியதாகாது! சிறுமைக் குணம சிககலைத்தான் வளர்க்கும்! மக்களின் அதிருப்தி இநத முறைகளால அடங்கிவிடாது; உண்மையில் வளரத் தான் செய்யும் !

செத்த பின்னரும் சட்டம் துரத்துகிறது!

'அழியட்டுமே திராவிடம்!' என்ற நூலை எழுதிய ஆசிரியர் தோழர் து. வீ. நாராயணன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க சென்னை அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளது. தோழர் து. வி. நாராயணன் இறந்து பல திங்கள்களாயிற்று. செத்த பின்னரும் அரசாங்கம் அவரை விடுவதாயில்லை !

உல்லாசபுரியினர் ஓடப்பார்க்கின்றனர்

வெறுங்கையோடன்று— இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டிக்கொண்டுதான்

இந்தியாவில் சமஸ்தானஙகளின் ராஜாதி ராஜாக்கள், மகாராஜாக்கள் உழைக்காமல் உண்டு கொழுத்து, சனுதனத்தின் பெயரால் கடவுள் அம்சஙகளாக விளங்கி, நாட்டில் மனம்போனபடி கொடூர ஆட்சி நடத்திய லீலா விநோத உல்லாசபுரிப் பேர்வழிகள், இப்போது, சமஸ்தானஙகள் இந்தியநாட்டுடன் இணைக்கப்பட்டு விட்டபடியால் கையில் கிடைத்த சொத்துக்களையும் இன்னும்முடிந்தவரை சுரண்டக்கூடிய சொத்துக்களையும் சுற்றிக்கொண்டு பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கோடச் செய்து வரும் சதி புதுடில்லியில் அம்பலத்திற்கு வந்துளது.

ஜனநாயகம் தெரியாத அமைச்சர்கள்

காசா சுப்பராவ் கூறும் உண்மை

மைசூர் சமஸ்தானம், ஆவது பத்திரிகையாளர் மாநாட்டைத் துவக்கிவைத்தகாசா சுப்பாராவ், "சுதந்திரம் கிடைத்து இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. ஆனுல் ஜன நாயகத்திற்குரிய பயிற்சி மக்களுக்குத் தரப்படவில்லை. தங்கள் கட்சியின் ஆதரவு மட்டும் இருந்தால் போதுமென்று மந்திரிகள் கருதுகின்றனர்" என்று கூறினுர்.

ஜன நாயக முறையில் மக்களைப் பயிற்றுவித்தால் தேர்தலில் மறுபடியும் வெற்றி பெற முடியுமா? ஜன நாயக முறையில் நாடு நடை பெற வேண்டும் என்னும் அவா விருந்தால், பழைய காலத் தேர்தல் பட்டியலை,ஒழுங்கான முறையில் அமைந்திராத தொரு பட்டியலை வைத்துக் கொண்டு, அதன் மீது ஜில்லா போர்டு தேர்தல்களை நடத்த அமைச்சர்கள் துணிந்திருப்பார்களா? ஜனநாயக முறை என்பதெல்லாம் அமைச்சர்கள் அகராதிப்படி காங்கிரஸ் கட்சி தான். அவ்வொரு கட்சி தவிர மீதி எந்தக் கட்சியும் எதிர்க்கட்சியாக அமைவதையோ, தேர்தல்களில் எதிர்த்துப் போட்டியிடுவதையோ, காங்கிரஸை எதிர்த்துஒருஎதிர்க்கட்சியாக உருவாகிவருவதையோ அமைச்சர்கள் விரும்புவதில்லை! அரசாங்கம் செய்யும் தவறுகளை அச்சமின்றி எடுத்துக் காட்டும் பத்திரிகைகளுக்கும், நாட்டில் மலிந்துள்ள ஊழல்களைக் கண்ணுடிபோல எடுத்துக் காட்டும் நூலகளுக்கும் ஜாமீன் கேட்டும், பறிமுதல் செய்தும் தடுத்து வைக்கும் தடை நடவடிக்கை முறைகளைக் கையாளத் தவறியதில்லை.

பதவியை விட்டு வெளியேறும் சனுதனப் பித்தம்கொண்ட ஓர் அமைச்சர் எதிர்க்கட்சியினர் மத விரோதிகளாகையால் அவர்களுடைய நூல்களைத் தருவித் துருவிப் படிக்கவேண்டும் என்று எழுதிவைத்துவிட்டுப் போவார். தாய் 10 அடி பாய்ந்தால் குட்டி 15 அடி பாயும் என்பதுபோல், பதவியில் வந்தமரும் மற்ருேர் சனுதனப்பித்தர் நூல்களைத் துருவிப் பார்ப்பதென்ன? எழுதியவரையும் அச்சிட்டவரையும் கைது செய்துவிடலாமே என்று குதிப்பார்; கட்டளை பிறப்பிப்பார். வெளியே வந்து மேடை மீதேறிப் பேசுகையில், காங்கிரஸ் அரசாங்கம் மதச்சார்புடையதன்று எனப் பேசுவர். இதுதான் இன்றுள்ள காங்கிரஸ் அமைச்சர்களுடைய ஜனநாயக முறையாகும்.

இந்த ஜனநாயக முறைக்குத் கண்போனவர்தான் தோழர் காசா சுப்பாராவ். ஆனுல் பெங்களூர் பத்திரிகைக்காரர்கள் மாநாட்டில் கால்வைத்தவுடன் உணர்ச்சி மாறி, உண்மை ஜனநாயகம் இன்னதென்பதைக்கூறி அமைச்சர்களின் போக்கை எடுத்துக் கூறவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிவிட்டார் போலும்! எப்படியிருந்தபோதிலும் காசா சுப்பாராவ் இன்றுள்ள நம் நாட்டமைச்சர்களின் உள்ளக்கிடக்கையைப் படம் பிடித்துக் காட்டினுர் அந்தச சில சொற்களின்மூலம்.உண்மை வெளிவரத்தானே செய்யும்!

இந்தியா மதச்சார்பற்ற நாடு

ஆனுல் நடப்பது சனுதன ஆட்சி

இந்தியாவின் முதல் அமைச்சர் பண்டித ஜவாஹர்லால் நேரு அலாகாபாதில் பேசுகையில்,

"இந்தியா மதச்சார்பற்ற நாடு, இந்நாட்டில் எல்லா மக்களும் ஒரே குலத்தவர்; ஒரே இனத்தவர்; ஜாதிமத வித்தியாசங்கள் எதுவுமின்றி எல்லாத் துறைகளிலும் எல்லாருக்கும சமசந்தர்ப்பமளிக்கப்படும்"

என்று கூறினுர். ஆனுல் இதற்கு நேர் விரோதமாகச் சென்னை மாகாணத்தில் சனுதன ஆட்சி நடை பெறுகிறதென்றே கூற வேண்டும். ஓர் அமைச்சர் தம் வேலைகளை விட்டு விட்டு, சமஸ்கிருதப் பிரசாரத்தில் இறஙகியுள்ளார். பொறுப்புடைய அரசாஙக இலாகாவை வகிக்கும் மற்ருெருவர் இந்து கலாசாரத்தைப் போதிக்க மடஙகளிடமும் கோயிலிலும் பணம் திரட்டுகிருர். கவர்னர் ஜெனரல் பாதாள விநாயகர் கோவிலைத் திறந்து வைக்கிருர். இதற்குப் பெயர் மதச்சார்பற்ற முறை.

சென்னை மாகாணத்தில் 35,000 கிராமங்கள்

அமைச்சரின் அறிவுரை

"சென்னை மாகாணத் திலுள்ள 35,000 கிராமங்களும் தத்தம் சேவைகளைத் தாஙகளே பூர்த்தி செய்து கொள்ள முன் வநது முயற்சி செய்ய வேண்டும்." என்று விவசாய அமைச்சர் எ.பி. ஷெட்டி கூறினுர்.

கிராம வாசிகளைத் "தரித்திரநாராயணர்கள்" என்ருர் காந்தியடிகள். ஆனுல், காந்தியடிகளின் சீடப்பரம்பரையினரான திரு. ஷெட்டி, கிராமவாசிகளே தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்கிருர். கிராமவாசிகளின் உண்மை நிலையையும், கிராமங்களின் சீர் கெட்ட நிலையையும், கிராமஙகளின் உண்மையான தேவைகள் என்னென்னவென்பதையும் உண்மையில் இந்த அமைச்சர்த் தோழர்கள் அறிந்தவர்களாயிருந்தால் இப்படியெல்லாம் பொறுப்பற்ற முறையில் பேசுவார்களா? நம் நாட்டு அமைச்சர்கள் நாடாளும் விதம் இது!

உள்ளத்தை உருவாக்க இலக்கியமே ஏற்ற ஆயுதம்

இலக்கிய மறுமலர்ச்சி காண இளைஞர்கள் கிளம்பவேண்டும்

புகழேந்தி இளைஞர் கழகத் திறப்புவிழாவில் இரா. நெடுஞ்செழியன்

சென்னை, செப். 4—

எழும்பூர் உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் புகழேந்தி இளைஞர் கழகத்திறப்பு விழாக் கூட்டம் நேற்றுமாலை 5-30-மணிக்கு சிறப்புற நடந்தேறியது. கூட்டத்திற்கு மாணவர்களும், பொதுமக்களும் பெருவாரியாக வந்திருந்தனர்.

கூட்டத்திற்குத் தோழர் ரா. ப. சோமசுந்தரம் எம். ஏ., பி. டி., அவர்கள் தலைமை தாங்கினர்கள். தலைவர் தம்முன்னுரையில் புகழேந்தி இளைஞர் கழகத்திறப்பு தோன்றுவதற்கு மாணவர்களின் உள்ள எழுச்சியே காரணமாக இருந்தது என்றும், கூட்டங்களைப் பேருணர்ச்சி யூட்டுபவர்களைக் கொண்டு கூட்டவே அவர்கள் ஆவலுறுகிறார்களென்றும், அவர்கள் ஆவலை நிறைவேற்றித் தருவதே தம் கடன் என்று எண்ணி இந்தக் கூட்டத்திற்குத் தாம் இசைந்ததாகவும் கூறினர். அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைக் கழகத்தைத் திறந்து வைக்கும் பணியை நிறைவேற்றிவைக்கும்படியாகக்கேட்டுக்கொண்டார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புகழேந்தி இளைஞர் கழகத்தைத் திறந்துவைத்துப் பேசிய தன் சுருக்கம் வருமாறு:—

புகழேந்தி-உவகைபயக்கும் பெயர்

புகழேந்தி இளைஞர் கழகத்தைத் திறந்துவைக்கும் பணியினை, ஆர்வ மிகுதியால் மாணவத் தோழர்கள் எனக்கு அளித்துள்ளார்கள். அதனைப் பெருமைக்குரிய செயலெனக் கருதி நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.

தமிழ்க்கழகம்-அதுவும் இளைஞர் தமிழ்க்கழகம்-தமிழ்ப்புலவன் ஒருவன் பெயரில்-அதுவும் கேட்டவுடனே மனவெழுச்சி தரக்கூடிய தன்மை வாய்ந்த பெயரான புகழேந்தியின் பெயரில், என்று எண்ணும் போது, உள்ள உவகை யாருக்கும் தோன்றுமலிராது. அது தமிழ் இலக்கிய வளர்ச்சி கருதியும், தமிழுக்கு ஆக்க மளிக்கும் நோக்கங்கருதியும் மாணவ இளைஞர்களால் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பெருமையுடன் திறந்து வைக்கிறேன், சொற்பொழிவாற்றுவதன் மூலம்.

இலக்கிய வளர்ச்சிக் கென்று தோன்றிய இக்கழகத்திலுள்ள மாணவர்கள் அனைவரும், வெறும் புகழேந்தியைப் பற்றிய கதைகளைக் கூறி, பக்திப்பரவசத்தில் மூழ்கி, பொழுது போக்குவதற்காகவே கொள்ளப்பட்டதாக இருக்கக் கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும், இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு, உங்களால் தமிழிலக்கிய உலகுக்கு எவ்வளவு மெருகு கொடுக்க முடியுமோ அவ்வளவையும் கொடுக்க, முற்படவேண்டும். அத்தகைய உள்ள உணர்வைத் தூண்டுவதற்கே இத்தகைய கழகங்கள் பயன் படவேண்டும். பயன்படும் முறையில் கழகத்தை ஈர்த்துச்செல்ல வேண்டிய பொறுப்பும் உங்களுடையதாகும்.

இலக்கியம்-ஒப்புயர்வற்றகலை

இலக்கியக்கலை மற்றெல்லாக்கலைகளைக் காட்டிலும் சிறப்புடைய உயர்கலையாகப் போற்றி மகிழ்கிறார்கள் உலகத்தவரெல்லோரும். மற்ற கலைகள் எழுப்பும் இன்ப-உணர்வு-அலைகள் அத்துணையையும் இலக்கியக் கலை; படிப்போர், கேட்போர் உள்ளத்தில் எழுப்புவது மட்டுமல்லாமல், மற்றக் கலைகள் எழுப்பத் தவறும் உள்ள நெகிழ்வுகளை யெல்லாம் எழுப்பக் கூடிய அரிய தன்மை வாய்ந்ததாக இருக்கிறது.

மக்கள் உள்ளத்தை உருவாக்கும் ஒரு பெரும் சிறந்த ஆயுதம் இலக்கியமேயாகும். உள்ளத்தைப் பண்படுத்துவதும், அதில் கருத்துவிதைகளைத் தூவுவதும இலக்கியத்தின் பண்பாடாகும. மக்கள் உள்ளத்தை உருவாக்க நினைத்த உலகப் புரட்சி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற துணைபுரிந்த ஆயுதம் இலக்கியமேயாகும். ஆகவேதான் ஒடிந்து—மாசு படிந்துகிடக்கும் மக்கள் உள்ளங்களை, இந் நாட்டில் பக்குவப்படுத்தவேண்டிய பொறுப்பு உங்களைப்போன்ற இளம் இலக்கிய வீரர்களின் கடமையாகும்.

இலக்கியம் ஒன்றுதான் இறந்தகாலத்தை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்தும் சீரியகருவியாகும். இறந்தகால மக்களின் மனப்போக்கை அறிவதற்கு இலக்கியம் பயன்பட்ட அளவுக்கு, வேறு எந்த சாதனமும் பயன்படவில்லை. இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்று கூறுவர்.

பழமைக் கருத்துக்கள்

வருங்கால வாழ்வினை உருவாக்க ஆசைப்படும் நாம், இற[illegible]திலே நிகழ்ந்தவற்றையும், இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருப்பனவற்றையும் கண்டறிந்துகொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

இறந்தகால இலக்கியங்களைத் திரும்பிப் பார்க்கும போது, பழமைக் கருத்துக்கள தென்படுகின்றன. எந்தெந்த காலங்களில் எந்தெந்த அளவுக்கு அவைகள் வளர்ந்தும், மாறியும, திரிந்தும், மறைந்தும் வந்திருக்கின்றன என்பதும் புலப்படுகிறது. பழமை என்றவுடனேயே, அதனிடத்து ஒருவித பக்திமனோபாவம் கொள்ளும் போக்கு நம்நாட்டவரில் பலருக்கு-குறிப்பாகப் பழந்தமிழ்ப் பண்டிதர்களுக்கு இருந்து வருகிறது. பழமைக்கு எப்படியேனும் ஏற்றமளிக்க வேண்டும என்று அவர்கள் துடியாய்த் துடிக்கிறார்கள். பழமைக் கருத்துக்கள் சரியா தவறா, ஏற்றவைதானா அல்லவா, தேவைதானா இல்லையா என்று அவர்கள் ஆராய்ந்துபார்க்க அவர்கள் மறுக்கிறார்கள். ஆராய்வதே 'பாபம' என்று சொல்லி பயமுறுத்தவும்செய்கிறார்கள். மேலும இந்தக் காலத்தில் பாவி, சிறப்புப் பெற்ற ஒரு கருத்தைப் பழமையோடு ஒட்டி வைத்துக் காட்டி பழமைக்கு ஏற்றமளிக்கவும் முயலுகிறது. அவர்களுக்கு ஆசை யிருக்கும் அளவுக்கு அறிவாராய்ச்சியில் அன்பு இருப்பதில்லை. மின்சாரத்தின் 'பாஸிட்டிவ்' 'நெகட்டிவ்' என்ற இருபகுதிகளும், பல நூற்றுக் கணக்கான ஆண்டுகள் செய்யப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சியின் பலனாக ஏற்பட்டவைகளாகும். அவைகள் தாம் 'சிவனும்', 'சக்தியும்' என்று முடிபோட்டுக் காட்ட சிலர்முயலுகிறார்கள். இதனால் பூரிப்பு ஏற்படலாமேயொழிய, அறிவு வளர்ச்சிக்கு இடமளிப்பதாக இருக்க முடியாது. காரணம் இம்மாதிரிய செய்கைகளால் உண்மை யறிவாராய்ச்சிக்குள்ள மதிப்பு குறைக்கப்படுகிறது-அன்பு போக்கடிக்கப் படுகிறது—ஆர்வம் குலைக்கப் படுகிறது. புதிய ஆராய்ச்சிக் கருத்துக்களைப் பழமையோடு ஒட்டிப் பார்க்க முயலுவதால், 'அறிவுக்கொலை' புரியப் படுகிறது என்ற பொருள்தான் பெறப்படும்.

பழமையை அடியோடுவெறுத்தொதுக்கச் சொல்லவில்லை நான் பழமைக்கு வளையாதீர்கள்-பழமைக்கு நெளியாதீர்கள் — பழமைக்குப் பணியாதீர்கள், ஆனால் பழமையைப் பாருங்கள். பார்த்துத் தேவையானதைக் கண்டெடுங்கள். தேவை யற்றதை ஒதுக்குங்கள்.

பழமை இலக்கியங்களைப் புரட்டுங்கள், நமக்கு ஒற்றுமை தரும் கருத்துக்களைப் பொறுக்கி யெடுங்கள, நம்மைப் பிளவு படுத்தும் பேதக் கருத்துக்களை ஒழியுங்கள்; வாழ்வை வளமாக்கும் கருத்துக்களை எடுத்துக் கொள்ளுங்கள், வாழ்வை மாய மாக்கும் கருத்துகளைப் போக்குங்கள். பேதமற்ற சமுதாயத்தை உருவாகப் பாடுபடுங்கள். சிந்தித்ததைச்சிந்தித்தபடியே வெளியிடும் அறிவாளியாக ஆகுங்கள். இரட்டை வாழ்வு மனப்பான்மையை ஒழியுங்கள். உண்மைக்கு-சரி என்று ஒப்புக்கொண்ட கருத்துக்கு மதிப்பு அளியுங்கள். தமிழ் இலக்கியத்தை அதற்குப் பயன்படுத்த முன் வாருங்கள். தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியைக் காணுங்கள் என்று கூறி புரட்சிக் கவிஞரின் பாடல்கள் சிலவற்றை யிடையிடையே எடுத்துக் காட்டாக எடுத்துக் கூறி, விரிவான முறையில் சொற்பொழிவாற்றிக் கழகத்தைத் திறந்து வைத்தார்.

தலைவர் பின்னுரையில், புதுமைக் கருத்துக்கள் பூக்கவேண்டியதன், அவசியத்தை வலியுறுத்தி, ஆங்கிலத்தைப் போல தமிழில் பல துறைநூல்களும் கொழித்தெழ வேண்டும் என்றும் கூறி, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி அவசியம் வேண்டும் என்றும் சொல்லி சீரிய முறையில் சில கருத்துக்களைக் கூறினார்கள். நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

உயிர் காக்கும் படகை இறக்குதலில் புதிய முயற்சி



கப்பலுக்கு ஆபத்து நேரிடும் காலத்தில், கப்பலிலுள்ளவர்களைக் காப்பாற்றுவதற்காக, உயிர்காக்கும் படகுகள் கப்பலில் வைக்கப்பட்டிருந்து, கடல் நீரில் மிதக்கவிடப்படும். உயிருக்கு மக்கள் மன்றாடிக் கொண்டிருக்கும் அம் மாதிரியான நேரங்களில், படகுகள் மிதக்க விடப்படுவது, விரைவாக நடந்தாகவேண்டும். இதுவரையில் பலர் சேர்ந்து கஷ்டப்பட்டு, அதிகநேரம் எடுத்துக்கொண்டு- படகுகளை இறக்கவேண்டியிருந்தது. படத்தில் காட்டியுள்ளபடி, புதிய முறையால் படகு இறக்கிவிடுவது, 5 செகண்டில், ஒருவர் முயற்சியிலேயே செய்துவிடக்கூடியதாக இருக்கிறது. இந்த முறையை அமெரிக்கா கண்டுபிடித்து, நடைமுறையில் கொண்டுவந்திருக்கிறது.

ஆசிரியருக்கு முடங்கல்

ஐயா!

சேலத்திற்குப் பக்கம் வாழும் மக்கள், பலர் கறுப்பு நிறமுடைய உப்புதான் நயமானது, ருசிகரமானது என்று எண்ணி, கறுப்பு நிறமுடைய உப்பையே பயன் படுத்தி வருவதாக, இங்கு உப்பு உற்பத்தி செய்யப்படுவதிலிருந்து, சேலத்துக்குப் பக்கம் அனுப்பப்படுவதிலிருந்தும் தெரியவருகிறது. அந்த எண்ணம் தவறானது. உண்மையில் கறுப்பு நிறமுடைய உப்பு நயமானது அல்ல.

இரண்டு விதமான உப்பு உற்பத்திப் பாத்திகள் உண்டு. ஒன்று பெண் பாத்தி, மற்றொன்று ஆண் பாத்தி. அவைகளில் ஆண்பாத்தியில் தண்ணீரைத் தேக்கிவைத்துக் கடுமையானவுடன் தெளிவுடன் பெண்பாத்திக்குச் செலுத்தி, வற்றச் செய்து வெண்ணிற உப்பு உற்பத்திச் செய்யப்படுகிறது. அதே போல்தான், கறுப்பு நிற உப்பும் தயாரிக்கப்படுகிறது. ஆனால் ஆண் பாத்தியில் தேக்கிவைத்திருக்கும் தண்ணீரைச் சுத்தமாகப் பெண் பாத்திக்கு அனுப்பாது, அழியைக் கலக்கி அசுத்தமாகப் பெண்பாத்திக்கு அனுப்பப்படுவதால்தான், உப்பு கறுப்பு நிறமாகிவிடுகிறது. எனவே உண்மையில் சுத்தமான உப்பு வெண்ணிறம் உடையது தானே ஒழிய கறுப்புநிறமுடையது அல்ல எனத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். உப்பு உற்பத்தியைப்பற்றித் தெரியாத மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்காவிட்டால் கடமையிலிருந்து தவறியவனாவேன் என்ற காரணத்தினால் இதை வெளியிடுகிறேன்.

கே. வி. கே. சாமி
தலைவர், உப்புத் தொழிலாளர் சங்கம், தூத்துக்குடி. 4—9—49.

சென்னை-சட்டக்கல்லூரி தமிழ்க் கழகம்:— 7—9—49 புதன் மாலை 5-மணிக்குச் சட்டக்கல்லூரிதமிழ்க் கழகத் தொடக்க விழா, நீதிபதி எம். சோமசுந்தரம் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ரா.பி. சேதுப்பிள்ளை பி. ஏ., பி. எல். அவர்கள் பேசுவார்கள்.

'குமரிக்கோட்ட கதை அரங்கம்

சென்னை, செப். 5—

4-9-49 ஞாயிறு காலை நடைபெற்ற தோழர்கள் ஆர்.பி. கண்ணையன்- ஜெயலட்சுமி சீர்திருத்தத் திருமணத்தையொட்டி, மாலை ஒரு கதையரங்கம் நடத்தப்பட்டது. அதற்கு 'தீ' ஆசிரியர் பத்மன் செல்லப்பன் அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் சி. என். அண்ணாதுரை தீட்டிய 'குமரிக் கோட்டம்' என்ற கருத்தோவியத்தைத் தோழர் பொய்கண்டார் ச. ர. பொன் அரங்கனார் இன்னிசைக் கதை நடத்தினர். முடிவில் தலைவர் சீர்திருத்தத் திருமணத்தின் சிறப்பையும், பெருந்தாத திருமணத்தைத் தலைவர் செய்தாலும, கண்டிக்க வேண்டியது கடமை என்பதையும் விளக்கி, பொன் அரங்கனாரின் கதைப் போக்கு போற்றற்பாலதென்றும் அவருக்குத் தமிழகம் ஆதரவளித்து, ஊக்கமளித்து, புதுக் கதைகளை நவீன முறையில், காலட்சேபம் செய்விக்க தூண்ட வேண்டியது அவசியமென்றும் பேசினர். திரளான மக்கள் 'குமரிக் கோட்டம்' கேட்டு மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். (ந-கி)

தோழர் இராம சின்னையா

நமது இயக்கத் தோழர் திருமயம் தோழர் இராம. சின்னையா அவர்கள், தொழில் சம்பந்தமாக அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு, 7-9-49 ம் நாள் புறப்படும் 'ரஜூலா' என்ற கப்பலில் மலேயா பிரயாணமாகிறார்கள். அங்கு இரண்டுமாதகாலம் தங்கலாம் என்று தெரியவருகிறது.

திருமணம்

கொடைக்கானல் நாயுடு புர[illegible]தில், 25-8-49 காலை தோழிய[illegible] கே. பி. பழனி அம்மாள் அவர்கள் தலைமையில் தோழர் பி. எஸ். முத்து அவர்களுக்கும், தோழியர் கே. பி. சிறு அம்மாள் அவர்களுக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. முதலில் வெளியிட்ட செய்தியில் பெண்ணின் பெயர் தவறுதலாக விடப்பட்டு விட்டதால், மீண்டும் செய்தி வெளியிடப்படுகிறது.

பணிபுரிவோருக்கு...

—[1-ம் பக்கம் தொடர்ச்சி]—

யும், எந்த ஒரு முடிவைச் செய்வதாக இருந்தாலும், அதே கட்சிப் பாகுபாடு தந்த பிளவு மனோபாவந்தான் குறுக்கே நிற்கும். இது அனுபவம். மக்களுக்கு நலம் எதுவும் கிடைக்காது. ஜில்லா போர்டு வெறும் மிருகக் காட்சிச் சாலையாகக் காட்சியளிப்பதை, மக்கள் காண நேரும். மக்கள் மகிழ்ச்சி கொள்ளார் அந்தக் கோலத்தைக் கண்டு. வெட்கப்படுவர், அரசியல் சூதாடிகளின் சூழ்ச்சிப்பிரசாரத்தில், மயங்கி, மதி இழந்தோமே என்று! கோபப்படுவர்-கொதிப்படைவர், அடுத்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள்; வெவ்வேறுவிதமான வரிசை வழங்குவார்கள்!

ஜில்லா போர்டுபோன்ற ஸ்தல ஸ்தாபனங்களில் அரசியல் கட்சிகளைப் புகுத்தி, வீண் பகைமையையும், நிர்வாக ஊழலையும், ஏற்படுத்தி, மக்களுக்கு இன்னல் பலவும் இழைக்க வேண்டாமென்று அறிஞர்கள் பலர் பலகாலமாகவே, கூறிவந்திருக்கிறார்கள்—ஏன்—காங்கிரஸ் கட்சியினரைச் சுட்டிக்காட்டி எச்சரித்தும் இருக்கிறார்கள். கேளாக் காதினதாகவே இருந்துவிட்டது காங்கிரஸ் கட்சி

இதே ஒரு அமைச்சர், அதுவும் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அறிவுரை கூறுகிறார்,—நமக்கல்ல; சிவகாசி நகராண்மைக் கழக உறுப்பினர்களுக்கு.

'தொழுநோயைப் பற்றவிட்டு விட்டு, காதும் மூக்கும் தடித்து, உதடு வீங்கி, உடல் அழுகி, அங்கம் குறைய ஆரம்பித்த பின்னர், அங்கம் ஏன் குறைய வேண்டும்? தேகம் ஏன் கெட வேண்டும்? துர்நாற்றம் ஏன் வீச வேண்டும்? என்ற கேள்விகள் அடுக்கடுக்காக மனத்துக்குள்ளே எழுந்து அரிக்க, அதற்குப் பரிகாரம்தேடுவதாகத்தீர்மானித்துக் கொண்டு, அந்த நோயைப் போக்க நல்ல மருத்துவமுறை எதும் கூறாமல், கால் கை குறைவதைத் தடுத்துக்கொள், நாற்றமடிப்பதை நிறுத்திக்கொள், அழகாகஉனக் காட்சிகொடு. என்று எந்த மருத்துவனாவது கூறமுன்வருவானா? மருத்துவத் தொழிலிலே, அத்தகைய நிபுணர்களைக் காண்பது கடினம். ஆனால் அரசியலிலே, இது போன்ற மருத்துவர்களைத்தான் காணமுடிகிறது. அதுவும் காங்கிரஸ் கட்சியிலே, இத்தகைய சிறந்த மருத்துவர்களுக்குத்தான் முதல் தாம்பூலம் தரும் நிலை இருக்கிறது.

மந்திரி கூறுகிறார், அதுவும் ஸ்தலஸ்தாபன மந்திரி;

"நகரசபை அங்கத்தினர்கள் கட்சிப் பிரதிநிதிகளாயில்லாமல் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும்! என்று உருக்கமாகப் பேசுகிறார் ஸ்தலஸ்தாபன மந்திரி.

"கட்சியை மற—கட்சிப் பிரதிநிதி என்பதை மற"—எதற்கு இந்த போதனை? 'மக்கள் முன்னேற்றத்துக்கு உழைக்க. ஸ்தலஸ்தாபன மந்திரியின் சித்தாந்தம் இது. கட்சி எண்ணம்-கட்சிப் பிரதிநிதி என்ற நடவடிக்கை—மக்கள் முன்னேற்றத்தைக் கவனிக்கும் நிலைமை உண்டாகாது, சகல மக்களும் சமம் என்று கொள்ளும் சமரச புத்தியைப் பெறவிடாது, நடுநிலைமை—நேர்மை முதலிய பண்புகள் வளருவதை விடாது. கட்சிமனோபாவம் நீதியைக் கொலைசெய்யும். கட்சிஉணர்ச்சியால கட்டுண்ட ஸ்தலஸ்தாபனங்கள், கட்சி எதிர்க் கட்சிகளமாகிறதேயன்றி, மக்கள் முன்னேற்றத்துக்குழைக்கும் மன்றமாக இருக்கவில்லை. அனுபவித்துக்கூறுகிறார் அமைச்சர். இதனை அறிவுரை என்போம்; அனைவரும் வரவேற்க வேண்டுமென்போம்.

அறிவுரை கூறும் பண்பு நீடித்து இருக்கவில்லை! அறிவு அமாவாசையாக மாறுகிறது. அலைமோதுகிறது. அவர் உள்ளத்தில் அடுத்த கணமே ஸ்ருதியை மாற்றுகிறார். இராக ஆலாபனையை மேற்கொள்ளுகிறார்.

ஆந்திர நாட்டின் வாக்காளர்களுக்கு, ஆணை இடுகிறார், வருகின்ற ஜில்லா போர்டு தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி அபேட்சகர்களை, வாக்காளர்கள் ஆதரிக்க வேண்டுமென்று. தேர்தல் முடிந்து காங்கிரஸ் கட்சியே ஜில்லா போர்டில் ஆட்சியை ஆரம்பித்த உடன், இதே அமைச்சர் சென்று, அறிவுரை கூறுவார்,

"உறுப்பினர்கள் கட்சிப் பிரதிநிதிகளாக இல்லாமல், மக்கள் முன்னேற்றத்திற்குத் தொண்டு செய்ய வேண்டும்" என்று.

ஏன் இந்த முரண்பாடு? தொடையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் விஷமப் பணிபுரிகிறார் அமைச்சர்!

பல ஜில்லா போர்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதற்கு மகிழ்ச்சி அடைகிறார்—இரண்டு ஜில்லா போர்டுகள் கை நழுவி விட்டதற்கு மருட்சிகொள்கிறார்; வருத்தப் படுகிறார்!

மக்களுக்கு நோய் மூட்டுகிறவர்களுக்கு மருத்துவர் என்ற பெயர் கூறுவதில்லை. தொத்து நோய்க் கிருமிகள் என்று சொல்லுவர் நோய் பரப்புஞ்ஜீவன்களை அரசியலில் இன்று காங்கிரஸ் கட்சி, இந்த நாட்டில், அந்த அரும் பணியைத்தான் ஓய்ச்சல் ஒழிவில்லாமல் செய்து கொண்டு இருக்கிறது.

தேர்தல்வெற்றிக் களிப்பை யூட்டுகிறது காங்கிரஸ் கட்சியினர்களுக்கு- அதன் அமைச்சர்களுக்கு. தேர்தல் முடிந்த பின்னர், சொந்தக்கட்சிக்குள், 'காண்டிராக்ட்' பிரச்னையில் குத்தி வெட்டு ஏற்படுகின்ற பொழுது, சோகம் பிறக்கிறது. அறிவுரை கிளம்புகிறது, 'கட்சியை மறந்து மக்கள் பணிபுரியுங்கள்' என்று. கோட்டைக்குள் கத்தி வீச்சு காணநேரும் பொழுது, காங்கிரஸ் கண்ணியம் கரைகிறதே என்று கலக்கம ஏற்படுகிறது. தெளிவுரை தூவப்படுகிறது, 'கட்சியை மறந்து கடமையைச் செய்யுங்கள்' என்று. வெறும் கேலிக் கூத்து!

லேபில் வேண்டாம்- கட்சி முத்திரை வேண்டாம்- ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரியச் செல்லும் நோக்க முடையவர்களுக்கு மக்கள் முன்னேற்றத்திற்கு உழைக்க உறுதி வேண்டும். கட்சி பேசுவது, கட்சி முத்திரையைச் சூட்டிக் கொள்வது, ஸ்தல ஸ்தாபன உறுப்பினர்களுக்கு அறவே கூடாது.

திருச்சி மாவட்ட நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டம்

கிளைக்கழக உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்

கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்

திருச்சி, செப். 5—

திருச்சி ஜில்லா திராவிடர் கழக உறுப்பினர்களும், ஜில்லாமுக்கியஸ்தர்களும் அடங்கிய சிறப்புக் கூட்டம் 4-9-49ம் நாள் ஞாயிறன்று மாலை 6மணிக்கு இனிது நடைபெற்றது.

36 கிராமக் கழகங்களிலிருந்து நிர்வாகஸ்தர்களும், 200க்கு மேற்பட்ட முக்கியஸ்தர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொன்மலைத் தோழர் ஜி. பராங்குசம் முன் மொழிய, மாகாண நிர்வாகக்குழு உறுப்பினர் தோழர் கே. ஆர். ராசா கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தோழர்கள்,

என். சங்கரன், வி. சீனிவாசன், ஏ. பி. தர்மலிங்கம், டி. அருணாசலம், மருதநாயகம், எம். எஸ். எஸ். மணி, முருகு சுப்பிரமணியம், எஸ். நெடுமாறன், பி. அழகமுத்து, தமிழடியான், எம். சோம சுந்தரம், டி. பி. மூர்த்தி, ஏ. கோவிந்தசாமி ஆகியோர் கட்சி நிலைமை பற்றியும், இனிச் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றியும் அபிப்பிராயங்களை விரித்தெடுத்துக் கூறினார்கள். பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்

1. சுயமரியாதை இயக்கத் தீ[illegible]ரான தோழர் பட்டுக்கோ[illegible]டை K. V. அழகிரிசாமி அவர்களின் பிரிவிற்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

2. திராவிடர் கழக தலைவராக இருந்த பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள்மீது நம்பிக்கை இல்லாததினால் அவர் தமது பதவியை ராஜிநாமா செய்து விடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறது.

3. ஜில்லா உதவி செயலாளராயிருந்த தோழர் R. சுலைமான் அவர்களின் ராஜிநாமா கடிதம் படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. 3—7—49 திருச்சி மாவட்ட உறுப்பினர்கள் கூட்டத்தில் பெரியாரின் பொருந்தா திருமணத்தை எதிர்த்து தி. பொ. வேதாசலம் தலைமையில் தீர்மானம் நிறைவேற்றி இருந்தும் அத் தீர்மானத்திற்கு விரோதமாக 10—7—49-ல் அறிக்கை விட்டதோடு இன்று திருமணத்தையும் ஆதரிப்பதால் அவர் மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானிக்கிறது. ஜில்லாவின் அடுத்த கழகக் கூட்டத்தில் கழகத்தைத் திருத்தி அமைத்து நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்குமாறு செயலாளர் V. சீனிவாசன் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

5. மாகாண திராவிட பெடரேஷனை கூட்ட வேண்டுமாய் 17-9-49ல் சென்னையில் கூடும் மத்திய திராவிடகழக உறுப்பினர்களை கேட்டுக் கொள்ளுகிறது.

6. மாகாண திராவிடர் கழக 20 வது (ஸ்பெஷல்) மாநாட்டைத் திருச்சியில் நடத்த அனுமதி அளிக்குமாறு மாகாண கழக கூட்டத்தை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இரவு 9 மணிக்குத் தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளரால் வந்தனம் கூறப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத்திற்கு வந்திருந்த ஜில்லா கமிட்டி உறுப்பினர்கள்:—கே. ஆர். ராசா (குளித்தலை). ஏ.பி. தர்மலிங்கம் (அம்பில்), ஜி. பராங்குசம் (பொன்மலை), சீனிவாசன் (ஸ்ரீரங்கம்-ஜில்லாக கமிட்டி செயலாளர்), எஸ். நெடுமாறன் (திருச்சி), எம். எஸ். மணி (உறையூர்), மருதநாயகம் (திருவானைக்கோவில்), எஸ். பி. சுப்பிரமணியம் (சீனிவாச நல்லூர்), டி. பி. அழகமுத்து (துறையூர்), என். சங்கரன் (திருச்சி), டி. கந்தசாமி (முசிறி-கடிதம் மூலம்).

கூட்டத்திற்கு வந்திருந்த ஜில்லா முக்கியஸ்தர்களும் கிளைக்கழகங்களின் உறுப்பினர்களும்:—

புதுக்கோட்டை:—முருகு. சுப்பிரமணியம், ஆசிரியர் 'பொன்னி'.

பொன்மலை:—திராவிடர் கழக உறுப்பினர்கள்:—எ. ம. நம்பிக்கை ராஜ் (தலைவர்), பரமசிவம் (உபதலைவர்), கோபால் (செயலாளர்), சவுந்தரராஜன், எஸ். டி. ராஜாதுரை, எம். சண்முகவேலு, இராமசந்திரன், சவுரிராஜுலு, கே. பாலகிருஷ்ணன், ஏ. கோவிந்தசாமி, ஆர். ரங்கராஜுலு, சி. எஸ். ராஜு (செயலாளர் வாசகசாலை), என். வேணுகோபால்.

திருச்சி மலைக்கோட்டை:—திராவிடர் கழக உறுப்பினர்கள்—டி. எல. மாணிக்கம் (செயலாளர்), டி. கே. மருதமுத்து, என். பிச்சை, [illegible]கே. தமையன், சின்னச்சாமி, அ. பாலசுப்பிரமணியம், ஆர். முத்துசாமி, டி. எஸ். டி. ஆர். சுப்பிரமணியன், பி. டி. சிவபுண்ணியம் (ஆசிரியர் மூவிடோன்), மு. நடராஜன், ஜி. ராமசாமி, ஆர். நாகசுந்தரம் (உபதலைவர்); முத்துக் கிருஷ்ணன் (நாகம்மை வாசக சாலைத் தலைவர்)

லால்குடி-திராவிடர் கழகம்:—ப. சிவப்பிரகாசம் (தலைவர்), எல். என். பரமசிவம் (உதவிச் செயலாளர்).

மணக்கால்—திராவிடர்கழகம்—ம. கி. சோம சுந்தரம் (உபதலைவர்)

செம்பரை-திராவிடர் கழகம்—எஸ். எஸ். சீனிவாசன்.

பெருவளநல்லூர் — திராவிடர் கழகம்-பி. எம். நாராயணசாமி.

வெள்ளனூர்-திராவிடர் கழகம்-அ. தங்கவேலு பம்பரஞ்சுத்தி—திராவிடர்கழகம்-ஏ. எம். ஆரோக்கியம், ஏ. செபஸ்டியன் (செயலாளர்), ஆ. அருளப்பன் (தலைவர்).

ஆதிகுடி—திராவிடர் கழகம்—ஏ. பி. கந்தசாமி உறையூர்—திராவிடர்கழகம்—எம். எஸ். மணி (தலைவர்), மு. மாணிக்கம், ஏ. ஆர். ராஜன், எஸ். முருகேசன் (செயலாளர்), ஏ. செல்வம், ஆர். கே. கோபி, வ. வரதராஜன், ச. தியாகராஜன்.

திருச்சி—வசந்தராயப் பிள்ளைத் தெரு திராவிடர் கழகம்-டி. எஸ். பி. மணியன் (செயலாளர்), டி. சி. டி. ஆரசு (தலைவர்)

திருச்சி—அருந்ததியார் தெரு திராவிடர் கழகம் கே. ஆர். சங்கரதாஸ்.

திருச்சி டவுன்— திராவிடர் கழகம்- என். சுந்தரம், தங்கநாயகம், மா. இராமலிங்கம், சி. வடிவேல், எம். சீனிவாசன், லிங்கய்யா, ஆர். கோபாலகிருஷ்ணன், கே. வி. சீனிவாசன், ஜி. ராஜாகோபாலன், டி. கந்தப்பன், டி, கோபாலரங்கன், குலசேகரன், குஞ்சிதபாதம், இரா. வ. முருகநாதன், காசிநாதன், மா. ரெத்தினம், மா. பெரியசாமி (மாணவர் கழகம்)

திருச்சி—பெரியகடை வீதி திராவிடர் கழகம்- எஸ். காளி, ஆ. அண்ணாமலை, வீ. புருஷோத்தமன்.

திருச்சி— கழகத் தோழர்கள்- கே. பழனிவேலு, தி. நா. இராமானுஜம, அனுக்கிரகம், வி. ராமசாமி, இராமமூர்த்தி, கோ. வேணுகோபால், வீ. அழகன், கோ. ராமானுஜம், நா. சண்முகம், மு. தங்கவேல்.

திருச்சி— நாகம்மையார் திராவிடர் கழகம்- த. நீலமேகம்.

திருசசி— அழகர்சாமி நடிகர் கழகம—எம். மெய்ஞ்ஞானமூர்த்தி, வேணுகோபால், (கழக உறுப்பினர்), டி. வி. ராசன்.

திருசசி— தென்னூர் திராவிடர் கழகம- ப. பாலசுப்பிரமணியன், ப. பாலகிருஷ்ணன.

திருச்சி— நக்கீரர் கழகம்- தி. உ. சங்கிலி (தலைவர்).

மணமேடு— திராவிடர் கழகம்- ஆ. ராசு (தலைவர்).

தொட்டியம்— திராவிடர் கழகம்- பொ. சு. கோபி (செயலாளா).

தாத்தையங்கார்பேட்டை—திராவிடர் கழகம்- மு. முத்துக்கருப்பன் (தலைவா).

துணையர நத்தம்:— திராவிடர் கழம்- ர. சீனிவாசன் (செயலாளர்)

ஆமூர்:—திராவிடர் கழகம்-வை. கந்தன், ரா. தங்கையன், த. அருணாசலம் (தலைவர்)

முருகப்பட்டி:—திராவிடர் கழகம்- ஆர். பெருமாள்.

திருவரம்பூர்:-திராவிடர் கழகம்- எம். சாமி அய்யா (உபதலைவர்), தமிழடியான், எம். சுப்பிரமணியம் (பொன்மலை)

மணப்பாறை:— திராவிடர் கழகம்- மு. தங்கவேலு

கரூர்:— திராவிடர் கழகம்- கே. ஆர். ராமசாமி, கே. வி. சீனிவாசன.

தவுட்டுப் பாளையம்:—திராவிடர் கழகம்-டி. பி. மூர்த்தி (செயலாளர்)

திருவளர்சோலை :— திராவிடர் கழகம-தி. ரெங்கராசு (தலைவர்)

மேலகற்கண்டார் கோட்டை:- திராவிடர் கழகம்- டி. ஆர். கோவிந்தராஜன்

மான்பிடி மங்கலம்,— திராவிடர் கழகம்- சி. மூக்கையன்

சிரங்கம்:— திராவிடர் கழகம்- இராம இலட்சுமணன், எம். நடராஜன்

திருவானைக்காவல் :— திராவிடர் கழகம- வடிவேல்

திருமணம்

பொன்மலை, ஆக. 28—

ஞாயிறு காலை 9மணிக்கு பொன்மலை தி. வாலிபர் கழகத் தோட்டத்திற்கு அருகில் கழக அங்கத்தினர் தோழர் சண்முகவேலுவின் தம்பி தோழர் வேலுசாமிக்கும் தோழியர் சேது அம்மாளுக்கும் சீர்திருத்த திருமணம் ம. தி. க. நிர்வாக கமிட்டி அங்கத்தினர் தோழர் G. பராங்குசம் தலைமையில் நடைபெற்றது அது சமயம் தோழர்கள், A. கோவிந்தசாமி, G. ராதா, T. K. சீனிவாசன் ஆகியோர் பொருந்தும் திருமணத்தின் குறிப்பையும் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பற்றி விரிவுரையாற்றினர். பின்னர். மணமக்களால் பொன்மலை. தி. வாலிபர் கழகத்திற்கும், மாலை மணிக்கும் முறையே ரூ 2 வீதம் நன்கொடை அளிக்கப்பட்ட பின், தலைவர் நன்றி கூறவோடு இனிது முடிந்தது எனத் தி. வா. கழக செயலாளர் அறிவிக்கிறார்.

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அபார்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழநியப்ப முதலியார், மதுரை

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.